Insieme Arti
Journal for Performing Arts
ISSN: 3048-9849 (Online)

Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

# சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளில் தாளங்கள்

**[1]ஷ்யாமளா ரங்கராஜன்**

(முனைவர் பட்ட ஆய்வாளர், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி.

shyamala51@hotmail.com )

**[2]முனைவர் ச. உமாமஹேஸ்வரி,**

(ஆய்வு நெறியாளர், குரலிசைத்துறை இணைப்பேராசிரியர் & முதல்வர்,

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி

umakalyan23@gmail.com )

**ஆய்வுச் சுருக்கம்**

கர்நாடக இசை மரபில் "சங்கீத மும்மூர்த்திகள்" என்று போற்றப்படும் ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ சியாமா சாஸ்திரி மற்றும் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஆகியோர் இசை, இலக்கியம், பக்தி மற்றும் லய நுணுக்கங்களை ஒருங்கிணைத்து எண்ணற்ற கீர்த்தனைகளைப் படைத்துள்ளனர். இம்மூவரின் கீர்த்தனைகளில் தாளத்தின் அமைப்பும் பயன்பாடும் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன. ஸ்ரீ தியாகராஜர் தமது கீர்த்தனைகளில் சர்வலகு நடை, பல்வேறு கிரகங்கள் (எடுப்புகள்), தேசாதி மற்றும் மத்யாதி தாள அமைப்புகளை திறம்படப் பயன்படுத்தியுள்ளார். சியாமா சாஸ்திரி மிஸ்ர சாப்பு, விலோம சாப்பு, த்விதாளக் கிருதிகள் மற்றும் சரபநந்தன தாளம் போன்ற அரிய லய வடிவங்களை கையாண்டு தமது தாளப் புலமையை வெளிப்படுத்தியுள்ளார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் சூளாதி சப்த தாளங்களை நவகிரகக் கீர்த்தனைகளில் பயன்படுத்தியதுடன், யதி அமைப்புகளையும் சிறப்பாகக் கையாண்டுள்ளார். இவ்வாய்வு, சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளில் காணப்படும் தாள அம்சங்களை


This work is licensed under CC BY-NC-SA 4.0

பகுப்பாய்வு செய்து, அவர்களின் லயச் சிந்தனைகளின் தனித்துவத்தை எடுத்துரைக்கிறது.

**முதன்மைச் சொற்கள்**

சங்கீத மும்மூர்த்திகள், தாளம், கிரகம் (எடுப்பு), தேசாதி & மத்யாதி தாளம், த்விதாளம், சூளாதி சப்த தாளங்கள், யதி

**முன்னுரை**

இந்திய இசை மரபில் கர்நாடக இசை உயர்ந்த செவ்வியல் இசை வடிவமாகத் திகழ்கிறது. கர்நாடக இசையின் வளர்ச்சிக்கும் பரவலுக்கும் மிகப்பெரும் பங்களிப்பை வழங்கியவர்கள் சங்கீத மும்மூர்த்திகளாகிய ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ சியாமா சாஸ்திரி மற்றும் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஆவர். இவர்களின் கீர்த்தனைகள் இசை, இலக்கியம், பக்தி, ராகம் மற்றும் தாளம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சிறந்த முன்மாதிரிகளாகக் கருதப்படுகின்றன.

கர்நாடக இசையில் ராகம் உயிராகக் கருதப்பட்டாலும், தாளம் அதன் கால அளவையும் ஒழுங்கையும் நிர்ணயிக்கும் அடிப்படை அம்சமாக விளங்குகிறது. தாளமின்றி இசையின் முழுமை சாத்தியமில்லை. இத்தகைய தாள அமைப்புகளை சங்கீத மும்மூர்த்திகள் தங்கள் கீர்த்தனைகளில் பல்வேறு வகைகளில் கையாண்டுள்ளனர். ஸ்ரீ தியாகராஜர் எளிமையான சர்வலகு நடையிலிருந்து பல்வேறு எடுப்பு முறைகள் வரை தாள நயங்களை வெளிப்படுத்தியுள்ளார். சியாமா சாஸ்திரி அரிய தாள வடிவங்கள் மற்றும் சிக்கலான லய அமைப்புகளைக் கொண்டு தமது தனித்துவத்தை நிலைநிறுத்தியுள்ளார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் சூளாதி சப்த தாளங்களையும் யதி அமைப்புகளையும் திறம்படப் பயன்படுத்தி தாள இலக்கணத்தின் ஆழத்தை எடுத்துக்காட்டியுள்ளார்.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

எனவே, சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளில் காணப்படும் தாள அம்சங்களை ஆராய்ந்து, அவற்றின் தனிச்சிறப்புகளையும் கர்நாடக இசை வளர்ச்சியில் அவை வகிக்கும் பங்கையும் விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.



**ஸ்ரீ தியாகராஜர் அவர்களின் கீர்த்தனைகளில் காணப்படும் தாள அம்சங்கள்**

**தாள நடை :** சர்வ லகு

சர்வ லகு என்பது, தகதிமி தகதிமி என்ற நடையில் இருக்கும். ஸ்ரீ தியாகராஜர், அவருடைய கீர்த்தனைகளில் ஆதி, ரூபக, ஜம்ப முதலிய தாளத்தில் அமைந்துள்ள கீர்த்தனங்களில் சர்வலகு அமைப்பைக் கையாண்டுள்ளார்.

கீழ் வரும் சில பாடல்களை உதாரணமாக கொள்ளலாம்.

- ‘அபிமான மென்னடு', ராகம் : விவர்தனி, தாளம் : ஆதி
- 'க்ருபால வால கலாதர சேகர', ராகம் : நாதவராங்கிணி, தாளம் : ஆதி
- பாலகனகமய' – ராகம் : அடாணா , தாளம் : ஆதி
- 'அனாதுடனு கானு', ராகம் : ஜிங்களா, தாளம் : ஆதி
- 'மாமவ ரகுராமா', ராகம் : சாரங்கா, தாளம் : ரூபகம்
- 'காலஹரண',ராகம் : சுத்தசாவேரி, தாளம் : ரூபகம்
- 'குருலேக எடுவண்டி', ராகம் : கௌரி மனோஹரி, தாளம் : ஜம்ப தாளம்

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

**க்ரகம்**

ஒரு பாடல் காலத்தில் அது தொடங்கும் இடத்தினை எடுப்பு அல்லது க்ரகம் என்று குறிப்பிடுவதுண்டு. இரண்டு வகையான எடுப்புகள் உள்ளன. அவை சம எடுத்து மற்றும் விஷம எடுப்பு ஆகும். மேலும் விஷம எடுப்பானது அதீத மற்றும் அனாகத என இரண்டு வகைப்படும். ஸ்ரீ தியாகராஜர், தனது கீர்த்தனைகளில் அனைத்து விதமான கிரகங்களையும் (எடுப்பு) பயன்படுத்தியுள்ளார்.

சம எடுப்பு என்பது பாட்டும் தாளமும் ஒரே சமயத்தில் தொடங்குவதை குறிக்கிறது.

- 'நாத ஸுதா ரஸம்பிலனு', ராகம் : ஆரபி, தாளம் : ரூபகம்.
- 'ராஜு வெடலெ', ராகம் : தோடி, தாளம் : ரூபகம்
- 'ராமா நினு நம்மின', ராகம் : மோஹனம், தாளம் : ஆதி
- 'தேஹி தவபத', ராகம் : சஹானா ராகம், தாளம் : ஆதி
- 'குருலேக எடுவண்டி', ராகம் : கௌரி மனோகரி, தாளம் : ஜம்ப
- 'நீவாடா நேகான', ராகம் : சாரங்கா, தாளம் : ஜம்ப

அனாகத எடுப்பு என்பது தாளம் தொடங்கிய பின் பாட்டு தொடங்குவதைக் குறிக்கிறது.

- 'சிவசிவ என ராதா', ராகம் : பந்துவராளி, தாளம் : ஆதி
- 'கருணா ஜலதே', ராகம் : நாத நாமக்ரியா, தாளம் : ஆதி
- 'பாஹி ராம', ராகம் : கரஹரப்ரியா, தாளம் : ரூபகம்
- 'ஹெச்சரிககா ராரா',ராகம் : யதுகுலகாம்போஜி, தாளம் : ஜம்ப

அதீத எடுப்பு என்பது, தாளம் தொடங்கும் முன் பாட்டு ஆரம்பிக்கும். அதாவது, முந்தைய ஆவர்தனத்தின் கடைசியில், பாட்டு தொடங்குவதை குறிக்கும்.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

'செடே புத்தி மானுரா' (ராகம் : அடாணா), 'வரலீலா கானலோல' –சங்கராபரண ராக கீர்த்தனைகளை உதாரணமாகக் கொள்ளலாம்.

இதில் 'வர||லீலா கானலோல' பல்லவி மட்டும் இல்லாமல் சரணங்களிலும் இதை கடை அதீத எடுப்பைக் கையாண்டுள்ளார். சுர|| வந்திதாப்ஜ, ரகு ||ராஜா தியாகராஜ

**தேசாதி மற்றும் மத்தியாதி தாளங்கள்**

தஞ்சாவூர் சமஸ்தானத்தில், மராட்டிய நாம சங்கீர்த்தனம் பாடும் தேசாதி மற்றும் மத்யாதி தாளங்கள் கையாளப் பட்டிருக்கின்றன. தேசாதி தாளம் என்பது, மூன்று தட்டுக்களையும், ஒரு வீச்சையும் கொண்டது. இந்த தாளத்தில், வீச்சில் முக்கால் இடத்தில் உருப்படிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த தேசாதி தாளம், பிறகு ஆதி தாளமாக போடும் வழக்கம் ஏற்பட்டது. இதை ஆதி தாளமாக போடும் போது, பாட்டு ஒன்றரை அக்ஷரத்தத்தில் ஆரம்பிக்கப்படுகிறது. ஸ்ரீ தியாகராஜர் இந்த தேசாதி தாளத்தில் அநேக கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். பின்வரும் கீர்த்தனங்களை உதாரணமாக பார்க்கலாம்.

- 'ரகுநாயகா', ராகம் : ஹம்சத்வனி
- 'சீதாபதே', ராகம் : காமாஸ்
- 'சலமேலரா', ராகம் : மார்கஹிந்தோளம்
- 'ஈவரகு', ராகம் : சங்கராபரணம்

மத்யாதி தாளம் என்பது, மூன்று தட்டுக்களையும் ஒரு வீச்சையும் கொண்டது. இந்த தாளத்தில் வீச்சில் அரை இடத்தில் உருப்படி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தேசாதி தாளம் போல் மத்யாதி தாளமும் பின்னாளில் ஆதி தாளமாக போடும் வழக்கம் ஏற்பட்டது. இதை ஆதி தாளமாக போடும் போது, பாட்டு அரை

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

அக்ஷரத்தத்தில் ஆரம்பிக்கப்படுகிறது. மேலும் இத்தாளமானது இரட்டை களையாக போடப்படுகிறது. உதாரணம்,

- 'மேருசமான', ராகம் : மாயாமாளவகௌளை
- 'ஏதாவுனரா', ராகம் : கல்யாணி
- 'சக்கனி ராஜ', ராகம் : கரஹரப்ரியா
- 'மோஹன ராமா', ராகம் : மோஹனம்

## சியாமா சாஸ்திரி அவர்களின் கீர்த்தனைகளில் காணப்படும் தாள அம்சங்கள்:-

சியாமா சாஸ்திரி தாளத்தில் மிகவும் புலமை வாய்ந்தவர். சில அறிய வகை தாளங்களை அவர் கையாண்டுள்ளார். விலோம சாபு தாளம், ஸிம்ஹநந்தன தாளம் போன்றவை இதனுள் அடங்கும்.

'பார்வதி ஜனனி' என்னும் பைரவி ராக கீதம் கண்ட ஜாதி மட்ய தாளத்தில் இயற்றியுள்ளார்.

சியாமா சாஸ்திரி, அறிய வகை தாளத்தில், சில வர்ணங்களும் இயற்றியுள்ளார்.

1. 'நா மனவி வினு', ராகம் : சௌராஷ்ட்ரம், தாளம் : சதுஸ்ர அட
2. 'சாமினி ரம்மனவே', ராகம் : ஆனந்தபைரவி, தாளம் : கண்ட அட
3. 'நீவே கதியெநி', ராகம் : கல்யாணி, தாளம் : திஸ்ர மட்ய

## மிஸ்ர சாப்பு மற்றும் விலோம சாப்பு தாளங்கள்

சியாமா சாஸ்திரி, அவரது உருப்படிகளில் மிஸ்ர சாப்பு தாளத்தை அதிக அளவில் பயன்படுத்தியுள்ளார். சாபு தாளம் என்பது, இரண்டு அக்ஷரங்களாக போடப்படுவதாகும். அதிலும் வித்தியாசமான எடுப்புகளை அவர் பயன் படுத்தியுள்ளார். சம எடுப்பு, ஒன்று தள்ளி, இரண்டு தள்ளி, மூன்று தள்ளி என்றவாறு இயற்றியுள்ளார்.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

- 'காமாக்ஷி லோக சாக்ஷி', ராகம் : மத்தியமாவதி, தாளம் : மிஸ்ர சாபு (சம எடுப்பு)
- 'ஏவரூரா', ராகம் : மோஹனம், தாளம் : மிஸ்ர சாபு (இரண்டு தள்ளி)
- 'எந்நாளு ஊரகே', ராகம் : சுபபந்துவராளி, தாளம் : மிஸ்ர சாபு (மூன்று தள்ளி)

தகிட தகதிமி (3 + 4) என்ற கணக்கில் அமைந்துள்ள சாபு தாளத்தினை தகதிமி தகிட (4 + 3) என்ற கணக்கில் அமைத்து விலோம சாபு என்ற பெயரில் பயன்படுத்தியுள்ளார்.

உதாரணமாக கீழ் வரும் சில கிருதிகளை காணலாம்.

1. 'நின்னுவிநாகமறி', ராகம் : பூர்வி கல்யாணி
2. 'தல்லி நின்னு நெர', ராகம் : கல்யாணி

**த்வி தாள க்ருதிகள்**

இது ஒரு கிருதியை, இரண்டு வெவ்வேறு தாளங்களில் ஒரே நேரத்தில் பாடுவதைக் குறிக்கிறது. சியாமா சாஸ்திரி இது போன்ற த்வி தாள கருதிகளை இயற்றியுள்ளார்.

கீழ் வரும் கிருதிகளை உதாரணமாகக் கூறலாம்.

1. 'ஹிமாத்ரிசுதே' - கல்யாணி ராக க்ருதி ரூபக தாளத்திலும், திஸ்ர நடை ஆதி தாளத்திலும் பாடப்படுகிகிறது.
2. 'பிரானவராலிச்சி' என்ற தெலுங்கு மொழியில் அமைந்த கிருதி (சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ள 'ஹிமாத்ரிசுதே' கிருதியின் அதே மெட்டில் இயற்றப்பட்ட கிருதி)
3. அதே போல் 'சங்கரி சங்குரு' - சாவேரி ராக க்ருதி ரூபக தாளத்திலும், ஆதி தாளம் திஸ்ர நடையிலும் பாடப்படுகிகிறது.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

**சரப நந்தன தாளம்**

தஞ்சை சமஸ்தானத்தில் ஒரு போட்டி நடைபெற்றது. அதில் பொப்பிலி கேசவைய்யா, சிம்ஹநந்தன தாளத்தில் ஒரு பல்லவியைப் பாடினார். சிம்ஹநந்தன தாளம் 108 தாளங்களுள் மிக நீள மானது மற்றும் 128 அக்ஷரங்களைக் கொண்டது ஆகும்.

இதன் அங்கங்கள் :-

குரு-குரு-லகு-ப்லுதம்-லகு-குரு-த்ருதம்-த்ருதம்-குரு-குரு-லகு-ப்லுதம்- லகு-ப்லுதம்-குரு-லகு-லகு-காகபாதம்

பொப்பிலி கேசவையா பாடிய சிம்ஹ நந்தன தாளப் பல்லவியை சியாமா சாஸ்திரிகள் உள்வாங்கி உடனே திருப்பி பாடினார். மேலும் அதோடு அவர் புதிதாக உருவாக்கிய சரப நந்தன தாளத்தில் ஒரு பல்லவியைப் பாடினார். சரப நந்தன தாளம் ஒரு ஆவர்த்தனத்திற்கு 79 அக்ஷரங்களைக் கொண்டது ஆகும்.

சரப நந்தன தாளத்தின் அங்கங்கள்

குரு-த்ருதம்-த்ருதம்-அநுத்ருதம்- லகு விராமம் -த்ருதம்-த்ருதம்-த்ருதம்- அநுத்ருதம்- லகு த்ருதம்- லகு த்ருத விராமம்- லகு த்ருதம்-த்ருதம்- அநுத்ருதம்-த்ருதம்- அநுத்ருதம் -த்ருதம்- லகு த்ருதம்- த்ருதம்-த்ருத விராமம்- லகு த்ருதம்

**முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களின் கிருதிகளில் காணப்படும் தாள அம்சங்கள்**

**சூளாதி சப்த தாளங்கள்**

முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவரது க்ருதிகளில் தாளங்களை மிகவும் நேர்த்தியான முறையில் கையாண்டுள்ளார். ஒன்பது கிரஹங்களைப் புகழ்ந்து, நவகிரஹ க்ருதிகள் இயற்றியுள்ளார். அவற்றிற்கு சூளாதி சப்த தாளங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

1. 'சூர்யமூர்தே நமோஸ்துதே' (சூரியன்), ராகம் : சௌராஷ்ட்ரம், சதுஸ்ர துருவ

   தாளம்
2. 'சந்திரம் பஜ மானச' (சந்திரன்), ராகம் : அசாவேரி, சதுஸ்ர மட்ய தாளம்
3. 'அங்காரகம் ஆஸ்ரயாம்யஹம்' (செவ்வாய்), ராகம் : சுருட்டி, சதுஸ்ர ரூபக தாளம்
4. 'புதம் ஆஸ்ரயாமி' (புதன்), ராகம் : நாடக்குறிஞ்சி, மிஸ்ர ஜம்ப தாளம்
5. 'ப்ரஹஸ்பதே தாரபதே' (வியாழன்), ராகம் : அடாணா, திஸ்ர திரிபுட தாளம்
6. 'ஸ்ரீ சுக்ர பகவந்தம் (சுக்கிரன்), ராகம் : பரஸ், கண்ட ஜாதி அட தாளம்
7. 'திவாகரதனுஜம்' (சனி), ராகம் : யதுகுலகாம்போஜி, சதுஸ்ர ஏக தாளம்
8. 'ஸ்மரம்யஹம்' (ராகு), ராகம் : ராமப்ரியா, ரூபக தாளம்
9. 'மஹாசுரம்' (கேது), ராகம் : ஷண்முகப்ரியா, ரூபக தாளம்

## யதி

யதி என்பது, தாளத்தின் அல்லது பாட்டின் அமைப்பிலுள்ள ஒரு குறிப்பிட்ட வகை அணியைக் குறிப்பது ஆகும். யதி 6 வகைப்படும். அவை சம யதி, விஷம யதி. கோபுச்ச யதி, ஸ்ரோதோவக யதி, டமரு யதி, மிருதங்க யதி ஆகியனவாகும். முத்துஸ்வாமி தீக்ஷிதர், தாளதசப்ராணத்தில் ஒன்றான யதி யின் அமைப்பை அவரது க்ருதிகளில் அழகாக பயன்படுத்தியுள்ளார். அதிலும் குறிப்பாக கோபுச்ச யதியை முத்துஸ்வாமி தீக்ஷிதர் பயன்படுத்திய விதத்தினை கீழ்காணும் உதாரணங்கள் மூலம் அறிய முடிகிறது.

கோபுச்ச யதியில், ஆரம்பம் அகலமாக விரிந்து, பிறகு சிறிது சிறிதாக குருகிக்கொண்டே வரும். கோ என்றால் பசு, பு என்றால் புச்சம் (வால்) பசுவின் வாலைபோல், சாஹித்திய வார்த்தைகள் ஒவ்வொன்றாக குறைந்து கொண்டே வரும். தீக்ஷிதரின் ஆனந்த பைரவி ராக கருதியை உதாரணமாக கூறலாம்.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

தியாகராஜ யோக
வைபவம்

ஆகராஜ யோக வைபவம்

ராஜ யோக வைபவம்

யோக வைபவம்

வைபவம்

பவம்

வம்

அதே போல் 'ஸ்ரீ வரலக்ஷ்மி' என்னும் ஸ்ரீ ராக க்ருதியிலும் கோபுச்ச யதி கையாளப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஸாரஸபதே

ரஸபதே

ஸபதே

பதே

பதே

**முடிவுரை**

சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளை ஆராய்ந்தபோது, தாளம் என்பது வெறும் கால அளவீட்டு முறையாக மட்டுமன்றி, இசையின் அழகியலையும் வெளிப்பாட்டு ஆற்றலையும் மேம்படுத்தும் முக்கியக் கூறாக விளங்குவதை அறிய முடிகிறது. ஸ்ரீ தியாகராஜர் எளிமையான மற்றும் இயல்பான சர்வலகு நடை, பல்வேறு கிரகங்கள் மற்றும் தேசாதி–மத்யாதி தாள அமைப்புகள் மூலம் இசையின் இனிமையையும் லய ஒழுங்கையும் ஒருங்கிணைத்துள்ளார். சியாமா சாஸ்திரி மிஸ்ர சாப்பு, விலோம சாப்பு, த்விதாளக் கிருதிகள் மற்றும் அரிய தாள வகைகள் மூலம் தமது ஆழ்ந்த லய ஞானத்தை வெளிப்படுத்தியுள்ளார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் சூளாதி சப்த

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

ISSN: 3048-9849 (Online)
Volume 3, Issue 2 (2026)
DOI: 10.63984/IAJPA.v3.i2.2026.180-190

தாளங்கள் மற்றும் யதி அமைப்புகளைப் பயன்படுத்தி தாள இலக்கணத்தின் நுணுக்கங்களை இசை வடிவில் நிலைநிறுத்தியுள்ளார்.

இதன் மூலம் சங்கீத மும்மூர்த்திகள் ஒவ்வொருவரும் தனித்துவமான தாளக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தாலும், கர்நாடக இசையின் லய மரபை வளப்படுத்துவதில் ஒப்பற்ற பங்காற்றியுள்ளனர் என்பது தெளிவாகிறது. இவர்களின் கீர்த்தனைகள் இன்றளவும் இசைக் கலைஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு தாள நுணுக்கங்களை அறிய முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன.

## துணை நூல் பட்டியல்

1. கிருஷ்ணன் R V, சங்கீத சாரம் (இரண்டாம் பாகம்), இசை தகவல் தொடர்பு மையம், சென்னை 41
2. கிருஷ்ணன் R V, 2004, சங்கீத சாரம் (ஐந்தாம் பாகம்), இசை தகவல் தொடர்பு மையம், சென்னை 41
3. சாம்பமூர்த்தி P, 1978, கர்நாடக இசை III தமிழில் 10 வது பதிப்பு, The Indian Music Publishing House, Madras – 600 001.
4. Sambamoorthy P. , Sixth Edition(1964), South Indian Music Book III,), The Indian Music Publishing House, Madras - 1

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0